செய்தி வெளியீடு எண். 220 நாள்.23.04.2018

# பத்திரிக்கைச் செய்தி

ஆற்றுப்படுகைகள், அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் பட்டா நிலங்களில் உரிய அனுமதியின்றி கள்ளத்தனமாக கனிமங்களை வாகனங்களில் எடுத்துச் செல்வது தொடர்பாக, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்களது உத்தரவின்பேரில், 16.04.2018 அன்று திருவள்ளூர் மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர் (பொ) திரு.ஆர்.பெருமாள்ராஜா மற்றும் விழுப்புரம் மண்டல பறக்கும்படை புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர் திரு.இ.சீனிவாசராவ் ஆகியோர்களால் கும்மிடிப்பூண்டி, கவரப்பேட்டை, பொன்னேரி, காரனோடை, செங்குன்றம, வடமதுரை, செங்காத்தாகுளம். குருவாயல், எல்லாபுரம், பெரியபாளையம் மற்றும் பாக்கம் ஆகிய பகுதிகளில் தீவிர ரோந்து பணிகள் மேற்கொண்டதில், கள்ளத்தனமாக கனிமங்கள் ஏற்றிச்சென்ற 15 வாகனங்கள் கைப்பற்றப்பட்டு கனிமவள விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட காவல் நிலையங்களில் பாதுகாப்பிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே, ஆற்றுப்படுகைகள், அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் பட்டா நிலங்களில் உரிய அனுமதியின்றி கனிமங்கள் எடுத்துச் செல்லும் வாகனங்களை கண்காணிக்க தொடர் தீவிர ரோந்து பணிகள் மெற்கொள்ளுமாறு வருவாய்துறை, கனிமவளத்துறை மற்றும் காவல்துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், இவ்வாறான குற்றச்செயலில் ஈடுபடும் வாகன உரிமையாளரர்கள் மற்றும் ஓட்டுநர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்வதுடன், இக்குற்றச்செயலில் தொடர்ந்து ஈடுபடுவோர்களை கண்காணித்து அவர்கள் மீது குண்டர் தடுப்புச்சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் எச்சரித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**